பனம்பாணி உற்பத்தி	மொத்த உற்பத்தி லீற்றரில்	442.8	800
கல்லாக்கார உற்பத்தி	மொத்த உற்பத்தி கி.கிராமில்	84.5	111
பனம்பழம்/பனங்கலி அடிப்படையான உற்பத்திகள்			
பனங்கழி உற்பத்தி	மொத்த உற்பத்தி லீற்றரில்	14,093	4,036
மென்பான உற்பத்தி	போத்தல்களின் எண்ணிக்கை (190மி.லீ)	6,004	8,400
பனங்கிறஸ் உற்பத்தி	போத்தல்களின் எண்ணிக்கை(750மி.லீ)	1,651	1,534
ஜாம் உற்பத்தி	போத்தல்களின் எண்ணிக்கை (450கி)	622	300
பனாட்டு உற்பத்தி	மொத்த உற்பத்தி கி.கிராம்	5,205	2,854
பாணிப்பனாட்டு	மொத்த உற்பத்தி கி.கிராம்	1529	265.5
ஓயில்க்கேக் உற்பத்தி	உற்பத்தி செய்யப்பட்ட எண்ணிக்கை (கி)	1,497	1,977
பனம் பலகார உற்பத்தி	உற்பத்தியான பைக்கற் எண்ணிக்கை	7,198	9,285
இனிப்பு உற்பத்திகள்	உற்பத்தி செய்யப்பட்ட எண்ணிக்கை	12,445	7,650
கிழங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்			
பனங்கிழங்கு உற்பத்தி	மொத்த கொள்வனவு கி.கி	1,998	3,720
புழுக்கொடியல் உற்பத்தி	மொத்த கொள்வனவு கி.கி	2,382.5	8,353
சீவல் ஒடியல் உற்பத்தி	மொத்த கொள்வனவு கி.கி	406	2,149
புளுக்கொடியல் மா உற்பத்தி	மொத்த கொள்வனவு கி.கி	1,931	2,092
ஓடியல்க்கூழ் உற்பத்தி	மொத்த கொள்வனவு (150கி)	225	205
பூம்போசா உற்பத்தி	மொத்த கொள்வனவு(150கி)	962	477
தும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள்			
தும்பு உற்பத்தி	மொத்த உற்பத்தி கி.கி	5,830	1,603

உற்பத்தி பெறுமதி (மில்) 9.15 9.70

உற்பத்தி நிலையங்களின் விபரம்

மாவட்டம்	பனைவெல்ல உற்பத்தி நிலையம்	பனந்தும்பு உறபத்தி நிலையம்	பனங்களி உற்பத்தி நிலையம்	உணவுரு மென்பான உற்பத்தி நிலையம்
யாழ்ப்பாணம்	சிங்கைநகர்	சுரசாலை	சிங்கைநகர்	யாழ்ப்பாணம் சந்தைப்படுத்தும்பகுதி
	நெடுந்தீவு		நெடுந்தீவு	
மன்னார்	கட்டுக்காரன் குடியிருப்பு	செல்வாரி	படப்படி	
	தரவன்கோட்டை	ஓலைத்தொடுவாய்		
	படப்படி			
திருகோணமலை	வரோதயநகர்		வரோதயநகர்	
மட்டக்களப்பு			முகத்துவாரம்	
கொழும்பு				பம்பலப்பிட்டி
புத்தளம்		கற்பிட்டி	கற்பிட்டி	

சந்தைப்படுத்தல்

பனை அபிவிருத்திச் சபையானது கற்பகம் விற்பனை நிலையத்தின் ஊடாக பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்திகளையும் பனைவளம் சார்ந்த உறபத்தியாளர்களது உற்பத்திகளையும் உற்பத்தி செய்கின்றது

விற்பனை நிலையங்கள் (கற்பகங்கள்)

1. யாழ்மாவட்டம்- நெல்லியடி – பருத்தித்துறை வீதி, வடமராட்சி
2. **யாழ்மாவட்டம்-**நல்லூர் - பருத்தித்துறை வீதி, நல்லூர்
3. **யாழ்மாவட்டம்**- காட்சியறை – சந்தைப்படுத்தும் பகுதி, கண்டி வீதி, யாழ்ப்பாணம்
4. **யாழ்மாவட்டம்-**இல. 129டி, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்
5. **யாழ்மாவட்டம-** யாழ்ப்பாணம் பஸ் நிலையம்
6. கொழும்பு மாவட்டம் - 244 காலி வீதி, கொழும்பு 04
7. மன்னார் மாவட்டம்- . பெரிய கடை மன்னார்
8. மட்டக்களப்பு மாவட்டம் -15, யுடிஎ கட்டடம், மட்டக்களப்பு
9. மட்டக்களப்பு மாவட்டம் - காட்சியறை, வெளிச்சவீடு, மட்டக்களப்பு.
10. திருகோணமலை-. மின்சார நிலைய வீதி, திருகோணமலை
11 **வவுனியா-.** 67:.68 கடைவீதி, வவுனியா
12. அம்பாறை மாவட்டம்- 107 டீ,மட்டக்களப்பு வீதி, கல்முனை
13. புத்தளம் **மாவட்டம-** புதிய் பஸ் நிலையம். கல்பிட்டி
14. ஹம்பாந்தோட்டை **மாவட்டம்** -புத்தவிகாரைக்கு முன்னால் திசமகாரகம.

மொத்த விற்பனை கற்பக விற்பனை நிலையம் (2013-2012)

	கற்பகங்கள்	2013	2012
	யாழ்ப்பாணம்		
1	வடமராட்சி	107,170.00	286,272.60
2	நல்லூர்	1,569,108.50	1,688,061.50
3	சுன்னாகம்	.....	135,483.00
4	காட்சியறை	915,679.00	3,821,849.95
5	கே. கே. எஸ் வீதி	1,397,559.25	1,467,405.00
6	பஸ்நிலையம்	380,256.00	557,254.00
7	களஞ்சியம்	2,141,628.63	1,964,895.88
8	பி. சி	48,000.00	
9	மாமுனை	1,800.00	
	கொழும்பு	0	
9	கற்பகம்	3,487,799.01	3,783,58
10	களஞ்சியம்	36,410.00	1,921,70
11	நடமாடும் விற்பனை சேவை	*1,557,137.50*	2,031,406.74
12	வவுனியா	4,313,455.00	4,705,473.00
	மட்டக்களப்பு	0	
12	கற்பகம்	1,825,744.50	414,141.06
13	காட்சியறை	975,132.00	556,819.00
14	கல்முனை	334,912.50	219,015.50
15	மன்னார்	658,556.00	827,858.50
16	திருகோணமலை	568,297.00	443,691.00
17	பி. சி. மன்னார்	13,000.00	29,455.00
18	பி. சி. கற்பிட்டி	....	1,740.00
	கற்பிட்டி கற்பகம்	130,250.00	110,855.00
19	வீரவில	190,515.00	112,505.00
	கற்பகம் திச	239,947.00	50,780.00
20	**மொத்தம்**	**20,892,356.89**	**25,138,349.93**

பனை ஆராய்ச்சி நிறுவனம்
செயற்பாட்டு அறிக்கை - 2013

மீளபுனரமைக்கப்பட்டுகடந்த 2012 ஆம் ஆண்டு ஆடி மாதம் 20 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட பனை ஆராய்ச்சி நிறுவனம் அன்று தொட்டு இன்றுவரை பனைவளத்தின் பயன்பாட்டை அதிகரிப்பதுடன் அதன் தரத்தையும் மேம்படுத்தும் தனது தொலைநோக்கு மற்றும் தூரநோக்குக்கமைவாக பின்வரும் பிரிவுகளின் கீழ் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றது.

1. பகுப்பாய்வுகூடம்
2. உணவுத் தொழில்நுட்ப ஆய்வுகூடம்
3. நுண்ணுயிரியல் ஆய்வுகூடம்

தற்பொழுது சந்தையில் இருக்கும் பனை சார்ந்த பொருட்களின் தரம் மற்றும் உற்பத்தியை மேம்படுத்தி அவற்றின் சந்தைப்படுத்தலை விரிவாக்கல், அவற்றின் இரசாயன, பௌதீக மற்றும் நுண்ணுயிரியல் கூறுகளை ஆய்வு செய்தல், பனை சார்ந்த புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டு பனையின் பயன்பாட்டை அதிகரித்தல் மற்றும் பனைவளம் சார்ந்தோரின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் ஆகிய குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு இதுவரையில் கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆராய்ச்சிகள் மேற்கொண்டுவரப்பட்டுள்ளன.

1. பனங்கட்டியின் தரத்தை மேம்படுத்துதல் -

தற்போது பனங்கட்டி உற்பத்தியில் பயன்படுத்தப்படும் சுண்ணாம்பின் தூய்மை மிகக் குறைவாக இருப்பதால் சுண்ணாம்பு மிதமிஞ்சிய அளவில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. இதனால் பனங்கட்டியின் தரமும் குறைந்துபோவதுடன் அதில் தேவையற்ற பல சேர்மானங்களும் மாசுக்களும் சுண்ணாம்பிலிருந்து சேர்ந்துகொள்கின்றன. எனவே சுண்ணாம்பின் தூய்மையை 90 சதவீதத்திற்கு மேலாக அதிகரித்து அதன் தேவைக்கு அதிகமான பாவனையைக் குறைத்தல் மூலம் பனங்கட்டியின் நிறம், சுவை, கட்டமைப்பு, பாவனைக்காலம் என்பவற்றை அதிகரித்து தரத்தை அதிகரித்தலே இவ்வாராய்ச்சியின் நோக்கமாகும். இவ்வாராய்ச்சி கடந்த தை மாதம் ஆரம்பிக்கப்பட்டு தற்பொழுது பூர்த்தி செய்யப்பட்டு அதற்கான இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. பின்வரும் முடிவுகள் இவ்வாராய்சியிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன.

a) உற்பத்தியின்போது பயன்படுத்தப்படும் சுண்ணாம்பின் தூய்மையானது 90 சதவீதத்திற்கு மேலாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

b) பயன்படுத்தப்படும் சுண்ணாம்பின் அளவு குறைக்கப்பட்டுள்ளதன் மூலம் பனங்கட்டி உற்பத்தியின்போது பனங்கட்டியில் சேரும் மாசுக்களின் அளவு பெருமளவில் குறைக்கப்படுகின்றது.

c) பனங்கட்டியின் நிறம், சுவை, கட்டமைப்பு, பாவனைக்காலம் என்பவற்றை அதிகரித்ததன் மூலம் அதன் தரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

d) பனங்கட்டிக்கான இலங்கைத் தராதரக் கட்டளைச் சட்டத்துக்கமைவாக அதன் தரம் அமையும்வகையில் உற்பத்தியின் தரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2. பனம்பழக்களியைப்பதனிடல்

தற்சமயம் சந்தையில் இருக்கும் பதப்படுத்தப்பட்ட பனங்களியானது காலாவதித் திகதிக்கு முன்னரே சில விரும்பத்தகாத மாற்றங்களுக்கு உட்படுவதால் சந்தைப்படுத்தலில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. அப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்முகமாக இவ்வாராய்ச்சி நுணணுயிரியல் ஆய்வுகூடத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் கடந்த மாதம் வரை மேற்கொள்ளப்பட்டு இலங்கைத் தரக்கட்டளைச்சபையின் கட்டளைக்கமைவாக தரமான பனங்களியை பதனிடும் முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் ஆகக்குறைந்தது 06 மாதங்களுக்கு அதனைக் பழுதடையாமல் பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாகவும் உள்ளது.

3. பனங்கள்ளின் தரத்தை மேம்படுத்தல்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளில் அல்கஹோலின் செறிவு, அமிலத்தன்மை, மொத்த நுண்ணங்கிகளின் எண்ணிக்கை என்பன அதற்குரிய மதுவரித்திணைக்களத்தின் கட்டளையிலிருந்து மிகப்பெருமளவில் வேறுபட்டுள்ளதை அவதானித்து அதன் தரத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியே இதுவாகும்.
தொழிற்சாலை சென்று அங்கு பனங்கள் உற்பத்தி செய்யும் முறையை கற்றறிந்து அதனையே அடிப்படையாகக் கொண்டு பல்வேறு மாற்றங்களுடன் கூடிய அதேவேளை சங்கத்தினரால் செயலாக்கக்கூடிய செயன்முறையை உருவாக்கியதுடன் கள்ளின் தராதரத்தையும் அதன் அல்கஹோலின் செறிவு, அமிலத்தன்மை, மொத்த நுண்ணங்கிகளின் எண்ணிக்கை என்பவற்றை நியமப்படுத்தி மேம்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் செயன்முறையின்போது பேணப்பட வேண்டிய வெப்பநிலை, நேரம், பயன்படுத்த வேண்டிய கள்ளின் இயல்புகள், போத்தலைக் கிருமி நீக்கம் செய்யும் முறை மற்றும் பயன்படுத்தும் போத்தலின் தன்மை போன்றனவும் ஆய்வின் மூலம் நியமம் செய்யப்பட்டு செம்மைப்படுத்தப்பட்டுள்ளன.

4. பனம்பழத்திலிருந்து பெக்ரின் பிரித்தெடுத்தலும் அதன் இயல்புகளை ஆராய்தலும்

பெக்ரின் பொதுவாக உணவைக் கெட்டிப்படுத்த சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட உணவுச்சேர்ப்பான் ஆகும். இது உணவு உற்பத்தியில் மட்டுமன்றி மருத்துவத்துறை, விலங்கு மருத்துவத்துறை, ஒப்பனைத்துறை, புகையிலை உற்பத்தி போன்ற பல்வேறு துறைகளில் எண்ணற்ற வகைகளில் பயன்படுத்தப்படுகின்றது. மிக வேகமாக அதிகரித்துவரும் சனத்தொகைக்கேற்ப அதிகரித்துவரும் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான அளவு பெக்டினை உற்பத்தி செய்ய முடியாமை வளர்ந்துவரும் நாடுகளில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. குறிப்பிடத்தக்க அளவு பெக்டினைக் கொண்ட மூலப்பொருட்கள் பெருமளவில் உள்ளபோதும் அவை சரிவரப் பயன்படுத்தப்படாமையும் அத்துடன் மூலப்பொருளிலிருந்து பெக்டினைப் பிரித்தெடுக்க உண்டாகும் செலவு அப்பொருளை இறக்கமதி செய்யத் தேவையான செலவை விட அதிகமாக இருப்பதுமே இதற்குக் காரணமாகும். எனவே உள்நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி சிக்கனமான பிரித்தெடுப்பு முறை மூலம் பெக்டின் உற்பத்தி செய்தலே இதற்குச் சிறந்த தீர்வாகும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து தற்போது பிரித்தெடுப்புக்குப் பயன்படும் மூலப்பொருட்களில் உள்ள பெக்டினின் அளவை விட அதிக அளவு பெக்டினைப் பனங்களி கொண்டுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது. அத்துடன் உடலாரோக்கியத்துக்குத் தேவையான விட்டமின் யு, நார்ச்சத்து, ஒக்சிஜனேற்றத் தடுப்பான் (யுவெை-ழஒனையவெள) உட்பட பல ஊட்டச் சத்துக்களையும் நிறமூட்டிகளையும் கொண்டுள்ளது. இருந்தபோதும் பனங்களியிலுள்ள கசப்புத்தன்மை காரணமாக அது சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் மிகப் பெருமளவில் வீணடிக்கப்படுகின்றது. எனவே பனங்களியிலிருந்து பெக்டினைப் பிரித்தெடுக்கும் செயன்முறை மூலம் பனங்களியின் பயன்பாட்டை அதிகரிப்பதுடன் அதன்போது பெக்டின் மட்டுமன்றி பல இடைநிலைப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளமுடியுமாதலால் அது இலாபகரமாகவும் அமையும். இக்கருத்துக்களை மையமாக வைத்து குறைந்த செலவில் மூலப்பொருட்களின் மீள்சுழற்சியுடன் வணிக ரீதியாக இலாபமீட்டக்கூடியவாறு பனங்களியிலிருந்து பெக்டின் பிரித்தெடுப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாராய்ச்சி உணவுத் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் தொடக்கம் இம்மாதம்வரை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாராயச்சியில் பனங்களியிலிருந்து இலாபகரமாகப் பெக்டின் பிரித்தெடுப்பதற்குரிய பிரித்தெடுப்பு முறை வடிவமைக்கப்பட்டதுடன் தேவையான அமிலம், அதன் அளவு, வெப்பப்படுத்த வேண்டிய வெப்பநிலையும் நேரமும், வடித்தெடுப்பு முறை, பனம்பழப் பருவமற்ற காலத்திலும் பெக்டினைப் பிரித்தெடுப்பதற்காகப் பனங்களியைப் பதப்படுத்தல் உட்பட செயன்முறையிலுள்ள பல்வேறு படிமுறைகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அவற்றைவிட பெக்டின் பிரித்தெடுப்பின்போது உண்டாகும் கழிவுப்பொருளை பெறுமதிசார் பொருளாக மாற்றுவதற்கான முயற்சியை மேற்கொள்வதற்காக உலர்த்தப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது.

5. பனையோலையில் நுண்ணங்கித்தாக்கத்தை குறைத்து பாதுகாத்தல் மற்றும் சாயமூட்டல்

பனையோலையில் பங்கசுக்களின் தாக்கத்தால் பனையோலை மிக விரைவில் மங்கிப் போவதுடன் சாயமூட்டும் அளவிலும் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றதென ஓலையின் தரத்தைக் குறைக்கும் பங்கசுக்கள் இனங்காணப்பட்டு அவற்றை வளரவிடாது தடுக்கும் மருந்துக்கலவையும் கண்டறியப்பட்டு ஓலையை நிறமூட்டுவதற்கான பொருத்தமான படிமுறையும் உருவாக்கப்படடுள்ளது.

6. பனைசார் உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தலுக்கான புதிய உத்திகளின் உருவாக்கம்

பனைசார் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் அவர்களின் பொருட்களை சந்தைப்படுத்தலிலும் நீண்டகாலம் பேணுவதிலும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அத்துடன் புதிய சந்தை வாய்ப்புக்களையும் மரபு வழியில்லாத சந்தைகளையும் கண்டறிவதன் மூலம் உற்பத்தியாளரின் வருமானத்தையும் வாழ்க்கை தரத்தையும் அதிகரிக்கவும் இந்த விடயங்களை கண்டறியவும் அதனை நிவர்த்தி செய்வதிற்கான சந்தைப்படுத்தல் உத்திகளை உருவாக்குவதற்கும் இவ் ஆராய்ச்சியானது மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டது. அளவறி மற்றும் பண்பறி கருவிகளை பயன்படுத்தி தரவானது சேகரிக்கப்பட்டு ஆராயப்பட்டு வினைக்கிறனான சந்தைப்படுத்தல் உத்திகள் உருவாக்கப்பட்டது. இவ் ஆய்வில் ஆறு சந்தைப்படுத்தல் உத்திகள் உருவாக்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்திட்டம் மற்றும் செயல் கண்காணிப்புத்திட்டம் என்பன உருவாக்கப்பட்டன.

7. பனங்களி சேர்ந்த யோகட் தயாரிப்பு

இவ்வாராய்ச்சி உணவுத் தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் இம்மாதம்வரை மேற்கொள்ளப்பட்டது. பனங்களி உடலாரோக்கியத்துக்குத் தேவையான உயிரிரசாயனக்கூறுகளையும், விட்டமின் யு, நார்ச்சத்து, ஒக்சிஜனேற்றத் தடுப்பான் (யுவெை-ழஒனையவெள) உட்பட பல ஊட்டச் சத்துக்களையும் நிறமூட்டிகளையும் கொண்டுள்ள ஒரு சிறந்த இயற்கைவளமாகும். இருந்தபோதும் பனங்களியிலுள்ள கசப்புத்தன்மை காரணமாக அது சரியான முறையில் உணவாகப் பயன்படுத்தப்படாமல் மிகப் பெருமளவில் வீணடிக்கப்படுகின்றது. எனவே பனங்களியில் உள்ள கசப்புத்தன்மையை உணரமுடியாதவகையில் அதனை வேறு பதார்த்தங்களையோ சுவையூட்டிகளையோ பயன்படுத்தி மறைக்கும் வகையிலமைந்த உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதால் பனங்களியின் பயன்பாட்டை அதிகரிக்க முடியும்.

பனங்களி யோகட்டில் பனங்களியும் பாலும் சேர்க்கப்படுவதால் ஊட்டச்சத்து மிக்க ஒரு உணவாக அமைகின்றது. இவ்வாராய்ச்சியில் சுவிஸ் யோகட், செற் யோகட், ஜெலி யோகட், ட்விஸ்ட் யோகட் என 4 வகையான யோகட் தயாரிக்கப்பட்டன. ஓவ்வொரு வகையிலும் வெவ்வேறு அளவு பனங்களி சேர்க்கப்பட்ட 5 கலவைகள் தயாரிக்கப்பட்டு அவற்றை இங்குள்ள உத்தியோகத்தர்களிடையே புலன் மதிப்பீட்டிற்கு உட்படுத்தி அந்தந்த வகை யோகட்களில் சிறந்த சேர்மானக்கலவை தெரிவு செய்யப்பட்டு மேலதிக ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வகை யோகட்டிலும் உள்ள நீர்க்கொள்ளளவு, தாதுப்பொருட்கள், மாச்சத்து, நார்ப்பொருட்கள், கொழுப்பு, புரதம் போன்ற ஊட்டச் சத்துக்கள் மற்றும் நுண்ணுயிரியல் காரணிகள் என்பனவும் அவற்றின் பாவனை காலமும் பரிசோதிக்கப்பட்டன. மேலும் இலங்கைத் தரக் கட்டளைச் சபையின் 824:1989 இலக்க கட்டளைக்கமைவாக யோகட் தயாரிப்பதற்கு ஏற்ப ஒரு உற்பத்திசாலையை அமைக்கத் தேவையான நிதி மற்றும் ஏனைய தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான அனைத்தும் ஆராயப்பட்டு அதனைச் செயலில் கொண்டுவருவதற்கான செயலாக்க ஆய்வும்மேற்கொள்ளப்பட்டது.

இவை தவிர விஞ்ஞானமாணி கற்கையினைத் தொடரும் பல்கலைக்கழக மாணவர்களும் தமது கல்வியின் ஓர் அங்கமாக பனைசார் ஆராய்ச்சியினை மேற்கொண்டு வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளனர். அவர்களது பல்கலைக்கழகங்கள் ஆற்றும் அவர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் என்பன கீழே விரிவாகத் தரப்பட்டுள்ளன.

1. விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - பனைசார் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி ஸ்பொஞ்ச் கேக் தயாரித்தல் - புழுக்கொடியல் மா, பனம்பாணி என்பன பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டன.
2. விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இயற்கையனன அதேநேரம் உள்ளூர் வளங்களைக் கொண்டு உடனடிப் பனங்கூழ் தயாரித்தல்
3. உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் - இயற்கையனன உள்ளூர் வளங்களைக் கொண்டு பாம்போஷா போன்ற பனைசார் துணை உணவின் தரத்தை அதிகரித்தல்
4. பாம் மற்றும் பால் மரங்கள் தொடர்பான கற்கைநெறி - ஊவா வெல்லச பல்கலைக்கழகம் - பனங்கருப்பணியில் நுங்கு பதனிடல்
5. இரசாயனவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சந்தையிலுள்ள பனங்கட்டியின் தூய்மைத்தன்மையை அறிவதற்கான முறையை இனங்கண்டு வடிவமைப்பதற்கான ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளார்.

ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தின் பாம் மற்றும் பால் மரங்கள் தொடர்பான கற்கைநெறி பயிலும் மூன்றாம் வருட மாணவர்களுக்கான 30 மணித்தியால விரிவுரையும் 15 மணித்தியால செய்முறையும் இவ்வாண்டு மாசி மாதம் 20, 21, 22 மற்றும் 23ஆம் திகதிகளில் இந்நிறுவன உத்தியோகத்தர்களால் இங்கு நடாத்தப்பட்டது.

அதேபோன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட மூன்றாம் வருட மாணவர்களுக்கும் உயர் தொழில்நுட்பக்கல்லூரி இறுதி வருட மாணவர்களுக்கும் இங்குள்ள உபகரணங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக ஒருநாள் பயிற்சிப்பட்டறையும் இவ்வாண்டு இடம்பெற்றது.

இதுவரை பூர்த்தியாக்கப்பட்ட 08 ஆராய்ச்சிகளின் முடிவுகளும் 2013. 11. 13 மற்றும் 2013. 11. 14 ஆம் திகதிகளில் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கங்களுக்காக நடைபெற்ற பயிற்சிப்பட்டறையில் வெளியிடப்பட்டன. இப்பட்டறையில் கீழ்க்குறிப்பிட்ட சங்கத்தினரும் பனை அபிவிருத்திச்சபையின் உறுப்பினரும் கலந்துகொண்டனர்.

2013. 11. 13 ஆம் திகதி கலந்துகொண்டவர்கள்.

1. அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம்
2. பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம்
3. சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம்
4. தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம்
5. கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம்

2013. 11. 14 ஆம் திகதி கலந்துகொண்டவர்கள்:

1. சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம்
2. காரைநகர்பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம்
3. கோப்பாய்பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம்

செயற்பாட்டுப் பெறுபேறுகளின் மீளாய்வு.

விபரம்	**2013**	**2012**
விற்பனைப்புரள்வு	20,892,356.89	25,138,349.93
விற்பனை இலாபம்	4,808,012.01	5,901,821.67
ஏனைய வருமானம்	8,566,395.68	6,354,736.33
இலாபம் (நட்டம்)	(12,578,653.99)	(9,763,831.79)
தேய்மானம் தவிர்ந்த இலாபம் (நட்டம்)	579,997.05	(1,139,483.79)
அரச பங்களிப்பு - மீண்டுவரும்	60,000,000.00	55,664,000.00
அரச பங்களிப்பு - மூலதனம்	32,000,000.00	24,048,000.00
ஊத்தியோகத்தர் தொகை	217	216

நிதியியல் மீளாய'வு	2013	2012
வருடத்திற்கான ஆரம்ப மிகுதி	1,235,049.54	1,731,488.48
பணக்கொடுப்பனவற்ற அசைவு		
தேய்மானம்	36,241,128.70	26,748,413.86
சொத்தாக்கல் ஒதுக்கம்	1,497,413.84	-
கடன்பட்டோர்களின்அதிகரிப்பு/குறைவு	(642,914.53)	386,968.66
கடனாளர்களின் அதிகரிப்பு/ குறைவு	3,100,246.11	12,327,243.74
கையிருப்பின் அதிகரிப்பு/ குறைவு	6,142,335.84)	(4,251,368.71)
முன்னைய வருட சீராக்கல்.	-	-
	34,053,538.28	35,211,257.55
	35,288,587.82	36,942,746.03
உட்பாய்ச்சல்		
விற்பனைப் புரள்வு	20,892,356.89	25,138,349.93
ஏனைய வருமானம்	8,566,395.68	6,354,736.33
அமைச்சு	17,941,619.51	37,473,894.07
ஏன்.ஜி.ஓ	3,506,310.50	65,923,783.18
	50,906,682.58	134,890,763.51
திறைசேரி மானியம்		
- மீண்டுவரும்	60,000,000.00	55,664,000.00
-மூலதனம்	32,000,000.00	24,048,000.00
	92,000,000.00	79,712,000.00
	178,195,270.40	251,545,509.54
வெளிப்பாய்ச்சல		
மீண்டுவரும் செலவினம்	102,037,406.56	96,920,918.05
மூலதனச் செலவினம்.		
நிலையான சொத்துக்கள	17,469,691.62	107,937,519.76
ஆரய்ச்சி அபிவிருத்தி	32,370,784.55	24,200,884.31
பயிற்சித் திட்டங்கள்	21,073,642.75	19,711,068.29
பனை நடுகை	1,792,906.04	1,540,069.60
	174,744,431.52	250,310,460.01
வருடத்திற்கான இறுதி மீதி.	3,450,838.88	1,235,049.54

ஆபத்து முகாமைத்துவம்

- பனை அபிவிருத்தியுடன் தொடர்பான ஒரே அரச நிறுவனம் இதுவாகும். பனை ஒரு பருவகால உற்பத்தியாதலின், வளங்களை முறையாக முகாமைத்துவம் செய்வது சபையின் நிலையான நடவடிக்கைகளுக்கு அவசியமாகும்.
- பனை ஒரு வரண்ட நிலப்பயிராதலின், பனை அபிவிருத்தித் துறையை மேம்படுத்திக்கொள்ளும் நோக்குடன் இதன் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்வதற்கும், தற்போதுள்ள பனை மரங்களைப் பேணிக்கொள்ளவும் முறைசார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன.
- பனையில் தங்கி வாழும் பெருமளவு மக்கள், சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த பிரதேசங்களில் வாழ்பவர்கள் அவர்களுக்குரிய பரிகார நடவடிக்கையாவும், அவர்களது சமூக, பொருளாதார நிலைகளை மேம்படுத்தும் நோக்குடனும் சபை அவர்களின் உற்பத்திப் பொருட்களை போட்டி விலையில் சந்தைப்படுத்த வேண்டியுள்ளது.
- கடந்த இரு வருடங்களாக ஏற்பட்ட பாதகமான பருவகாலமாற்றத்தால் பனைசார்ந்த உற்பத்திப் பொருட்களின் விளைவு பாதகமாகக் காணப்பட்டது.
- பனைசார்ந்த நுகரும் உற்பத்திப் பொருட்கள் அழிவடையும் இடரிலிருந்து தடுப்பதற்கு விசேடமான உணவு பாதுகாப்பு முறைகள் இணைக்கப்படவேண்டி இருக்கின்றது.
- வடக்கு -கிழக்குப்பகுதிகளில் பல்வேறு பாதக தன்மைகளால் பனை அழிக்கப'பட்டது எனினும் இதை தடுக்க 2000ம் ஆண்டு சட்டம் இயற'றப்பட்டது.
- யதார்த்தமான வரவு செலவுத்திட்டத்தை வரைவதன் மூலம் வடிவமைக்கப்படும் ஒழுங்கமைப்பினால் உள்ளகக் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகிறது

உத்திகள்.

- பனையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தித் துறையின் அபிவிருத்திக்கும் அதனுடன் தொடர்பான மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்கும் சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளும் முதன்மை நிறுவனமாக பனை அபிவிருத்திச் சபை விளங்குதல்.
- மேலும் பனம் பயிர்ச்செய்கையின் முன்னேற்றகரமான வளர்ச்சி, ஏனைய ஊடுபயிர்களின் வளர்ச்சி, பனை மரத்தோட்டங்களில் கால்நடை வளர்ப்பு நோய்களிலிருந்தும், தொல்லை தரும் சிறு பிராணிகளிடமிருந்து பயிர்களைக் காக்கும் செயற்பாடுகள் என்பவற்றுக்காக விஞ்ஞான ரீதியான ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்துதல்.
- பனம் விதை நடும் வருடாந்த செயற்திட்டத்தை மேலும் விரிவுபடுத்தல்
- பனை வளரும் பிரதேசங்களில் இளம் பனையோலை, பனந்தண்டு, ஈக்கிள் போன்றவற்றை மூலப்பொருட்களாகக் கொண்டு உருவாக்கப்படும் கைவினைப்பொருள் உற்பத்தி தொடர்பாக பனை அபிவிருத்திச் சபை, தொழிற்பயிற்சி அமைச்சுடன் இணைந்து இப்பிரதேச இளம் பெண்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டமொன்றைச் செயற்படுத்துதல்.
- பயிற்றுவிப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் பணி செய்வதற்குத் தேவையான மூலதனத்தின் ஒரு பகுதியை வழங்குவதோடு, பயிற்சி பெறுவோர் ஊடாக தரமான உற்பத்திகளை சபைக்குப் பெற்றுக்கொள்வதையும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- இயற்கை அனர்த்தங்களாலும், மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அழிவுகளாலும் பாதிக்கப்பட்ட பனம் பயிர்ச்செய்கையை மீளப் புனரமைத்தல்.
- பனையை அடிப்படையாகக் கொண்ட விதை நாட்டல், நார் உற்பத்தி, கைப்பணிப் பொருட் பயிற்சி என்பவற்றை நடைமுறைப்படுத்தும் பங்காளராக பனை அபிவிருத்திச் சபை விளங்குவதோடு, உதவி வழங்கும் நிறுவனங்களை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது.
- சர்வதேசச் சந்தையின் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காக தொடர்ச்சியான தேடல்களை மேற்கொள்ளல்

மனித மூலதனம்.

உத்தியோகத்தர்களின் உற்பத்திச் செயற்திறனை மேம்படுத்தும் வகையில் சபையை மீளமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் உத்தியோகத்தர்களுமே இதன் சொத்து என ஏற்றுக்கொள்கின்ற அதே வேளை, அவர்களின் பங்களிப்பை மேம்படுத்தும் வகையிலும், நிறுவன நலனுக்காகவும் சிறந்த பயிற்சித்திட்டங்கள், புலமைப்பரிசில்கள், பயிற்சிப் பட்டறைகள் என்பவை வடிவமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்படுகின்றன.

சூழல் பற்றிய அறிக்கையிடல்

பனை சிறந்த ஒரு உணவுப் பொருளாக அமைவதோடு ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் முதலாவதும், முக்கியமானதுமான ஒரு பயிராகவும், மருத்துவ ரீதியில் பயன்தரும் பயிராகவும் அமைவதால் பனை அபிவிருத்தியை புத்துயிரூட்டச் செய்வதற்கு விசேட தொழில்நுட்ப முறைகள் செயற்படுத்தப்படுகின்றன.

பனை மரம் மனிததேவைகட்காவும் போரினாலும் அழிக்கப்பட்டு வருகின்றது. இதனால் ''மகிந்த சிந்தனை'', ''வடக்கின் வசந்தம்'' திட்டத்தின் கீழ் வடக்கிலும் ''கிழக்கின் உதயம்'' திட்டத்தின் கீழ் கிழக்கிலும் மீழ்நடுகை செய்யப்பட்டு வருகின்றது.

பனை உணவுகள் இயற்கையானவை இதனாலும் இதன் உண்ணக்கூடிய, உண்ணமுடியாத உற்பத்திப் பொருட்களுக்கு அதிகரித்த கேள்வி நிலவுவதாலும் சபை பனை மரங்களின் எண்ணிக்கையை 11 மில்லியனில் இருந்து 20 மில்லியன் வரை அதிகரிக்கவுள்ளது

அத்துடன் பனம் கைப்பணிப்பொருட்கள் இயற்கைக்கு இசைவானவை. இவ் வருடத்தில் 3 அரசசார்பற்ற நிறுவனங்களால் பங்களிப்பு செய'யப்பட்டது. இது மட்டுமில்லாது கிராம மட்டங்களில், மிகவும் வறுமையில் வாழும் மக்களினதும், குறைந்த வருமானம் பெறும் மக்களினதும் சமூக, பொருளாதார வாழ்வு நிலையை மேம்படுத்துவதற்கு ஏதுவாக அமைகின்றது.

(இ) நிறுவன ஆளுகை

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம், பொதுமுயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு, என்பவற்றின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறைகளையும், பொறுப்பான அமைச்சு வழங்கும் வரையறைகளையும் நாம் பின்பற்றுகின்றோம்.

பணிப்பாளர் சபை.

முன்னரே குறிப்பிட்டதுபோல, 1971 ஆம் ஆண்டின் 46ம் இல, தென்னை அபிவிருத்திச் சட்ட மூலம், மற்றும் 1975ஆம் ஆண்டின் 24ஆம் இல திருத்தச் சட்ட மூலம், 2003ஆம் ஆண்டின் 40 ஆம் திருத்தச் சட்ட மூலம் என்பவற்றின் கொள்கைகளையே பனை அபிவிருத்திச் சபை பின்பற்றுகின்றது. பணிப்பாளர் சபை 9 உறுப்பினர்களைக் கொண்டதாகவும், கௌரவ அமைச்சர் அவர்களால் நியமிக்கப்படுவதாகவும் அமையும். நிதி அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சரின் பிரதிநிதியாக நியமிக்கப்படும் உறுப்பினரே நிதிக்குப் பொறுப்பானவராக அமைவார். ஏனைய 8 உறுப்பினர்களுள் ஒருவர், கௌரவ அமைச்சர் அவர்களால் தலைவராக நியமிக்கப்படுவார்.

பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்.

சபைக் கூட்டங்கள் முக்கியமான கொள்கைகள், நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ விடயங்களை ஆராயவும், தீர்மானிக்கவும் ஒவ்வொரு மாதமும் கூடுகின்றன. 2013 ஆம் ஆண்டு 08 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

கணக்காய்வாளர் முகாமைத்துவக்குழு

இக்குழுவில் கணக்காய்வாளர் முகாமைத்துவக்குழுப் பணிப்பாளரின் தலைமையின் கீழ் சுயேச்சையான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக பிரதி நிதிப்படுத்தும் திறை சேரி நாயகம் உட்பட இன்னும் வேறுநிறைவேற்று அதிகாரமற்ற இரு பணிப்பாளர்கள் இடம் பெறுவர் அழைப்பாணையின் பேரில் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி கூட்டங்களில் கலந்து கொள்வார்கள் கணக்காய்வாளர் முகாமைத்துவக் குழு ஏனைய நடவடிக்கைகள் உட்பட உள்ளகக்கட்டுப்பாட்டு முறை இடர்முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் சட்டவிதிகளின் தேவைக்கு இணக்கமாக செயற்படுதல் ஆகிய அம்சங்களை மீளாய்வு செய்கிறது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை..

கணக்காய்வு முகாமைத்துவக் குழு பின்வரும் வழிகளில் சபை பணிப்பாளர்கட்குதவுகின்றது.

அ. நேரகாலத்திற்கும் ஸ்திரமாகவும் நிதி அறிக்கையிடப்பட்டதை உறுதிப்படுத்தல்
ஆ. வியாபார ஆபத்து முகாமைத்துவம் பற்றி அறிக்கையிடல்
இ. முகாமைத்துவ உள்ளகக் கட்டுப்பாடு. பற்றி அறிக்கையிடல்
ஈ. உரிய கட்டுப்பாடு, உள்ளக ,வெளியார் , நிதி சம்பந்தமானவை உரியமுறையில் அறிக்கையிடப்பட்டதை உறுதிப்படுத்தல்
உ. சட்டத்தையும் கொள்கைகளையும் அமுல்படுத்தியதை உறுதிப்படுத்தல்
ஊ. உள்ளகக் கணக்காய்வார் கடமையை உறுதிப்படுத்தல்
எ. கணக்காய்வாளர் திணைக்கள கடமையை உறுதிப்படுத்தல்

மேலும் கணக்காய்வு முகாமைத்துவக் குழு நிதி பற்றி அறிக்கைகள் உரியகாலத்தில் அறிக்கையிடப்பட்டதை உறுதிப்படுத்தல்.
கணக்காய்வாளர் திணைக்கள அறிக்கையில் கருத்தில்கொள்ளக்கூடிய தகவல்கள் பெறப்பட்டு அவை ஆராயப்பட்டதுடன் திருப்தியுறும் வகையில் உள்ளகக்கட்டுப்பாடு இச்சபை சொத்துக்கள், நிதிகூற்றுக்கள் மற்றும் ஏனையவை உயரளவில் பேணும்வகையில் கருத்தில் கொள்ளப்படுகின்றது
2013 ஆம் ஆண்டு 02 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

உள்ளகக் கட்டுப்பாடு.

விநியோக நடவடிக்கைகளைப் பொறுத்தவரை அவசியமான நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக விலை மனுச்சபை, விலை நிர்ணயக் குழு, கொள்வனவுக் குழு என்பவற்றை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உள்ளகக் கணக்காய்வு நிதிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளிலும் மிகுந்த கண்காணிப்புடன் செயற்படுகின்றது.

முகாமைத்துவம்.

பொதுமுகாமையாளரின் கீழ், ஆறு பிரிவுத் தலைவர்கள் செயற்படுகின்றனர். பிரிவுத் தலைவர்கள் மாவட்ட இணைப்பாளர்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு பிரிவுத் தலைவரும் பிரதான நிறைவேற்று அதிகாரியான பொதுமுகாமையாளருக்கு தமது அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றனர்.

பிறவிடயங்கள்.

- அனுபவமும் ஆற்றலுமுள்ள தொழிலாளர்களின் சடுதியான குறைவு, இதற்கான சாதிப்பாகுபாட்டுத்தாக்கங்கள் இ உயிர் ஆபத்துக்குரிய இடர்த்தன்மைஇ பத நீர் எடுக்கும் போது மேற்கொள்ளவேண்டிய கஷ்டமான நடைமுறைஇ ஆகியன பனை வள வளங்களை கட்டுப்படுத்துதல்.
- தேவைக்கு அதிகமான பனைமரங்களைஇ பாதுகாப்பு, மரப்பலகை உற்பத்தி செய்தல், ஆகிய காரணங்களுக்காக வெட்டுவதனால் பனைமரங்களின் தொகை தொடர்ந்து குறைவடைந்து செல்லும் போக்கினைக் கொண்டுள்ளது.
- அரசாங்கத்தினதும் தனிப்பட்டவர்களினதும் இத்துறைக்கான மூலதனம் பாய்ச்சல் போதியளவு இல்லாமை.
- பனம் பொருட்களுக்கான விசேட ஆய்வு கூடவசதிகள் இல்லாமையும் , ஆய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடு இல்லாமையும் , பனம் பொருள் உற்பத்தித்துறையின் யதார்த்தமான அபிவிருத்திக்கு விஞ்ஞானத்துறை வளர்ச்சியின் பங்களிப்பு இல்லாதிருத்தல்.
- பனம் பொருள் உற்பத்தியின் போது பருவகால ஆரம்ப உற்பத்திப்பொருட்கள் அளவுக்கு மேலதிகமாக இருத்தல் அதனைத் தொடர்ந்து இவை அழிவடையும் தன்மையினால் வருடமுழுவதும் பனை உற்பத்தியிப் பொருட்களை பாதுகாக்கக்கூடிய களஞ்சியவசதி இல்லாத குறையை நிவர்த்தி செய்யவேண்டிய நிலைமை.

- போதிய அளவு அக்கறையும் முயற்சியும் உபாயங்களும் மேற்கொள்ளப்படாத காரணங்களினால் , உள்நாட்டிலும் , சர்வதேசமட்டத்திலும் நிலவும் செழிப்பற்ற சந்தை வலைப்பின்னலை அபிவிருத்தி செய்ய இயலாமை.
- உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பனம் பொருட்கள், உள்நாட்டு சந்தைகளில் , வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குறைந்த விலையுள்ள பனம் பொருட்களின் உட்பிரவேசத்தினால் , மந்த நிலையில் இருத்தல்.
- பனம் பொருட்கள் உற்பத்தி துறையைக் கட்டுப்படுத்துவதற்கும் நிர்வகிப்பதற்கும் புறம்பான சட்டவிதிகள் இல்லாமை.
- விஞ்ஞானிகளின் அக்கறை இன்மையும் , பனம் பொருட்களுக்கான விசேட ஆய்வு கூடவசதிகள் இல்லாமையும்இ ஆய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடு இல்லாமையும் , பனம் பொருள் உற்பத்தித்துறையின் யதார்த்தமான அபிவிருத்திக்கு விஞ்ஞானத்துறை வளர்ச்சியின் பங்களிப்பு இல்லாதிருத்தல்.
- பனை உற்பத்திப் பொருட்கள் போட்டி விலைகளில் சில்லறை வியாபாரிகளினால் விற்கப்படுவதால் கடுமையான விலை நிர்ணயக்கொள்கை ஒன்றைப் பின்பற்ற வேண்டியுள்ளது. அதே வேளை ஏற்றுக் கொள்ளத்தக்க தர நியமத்தையும் பேண வேண்டி உள்ளது.
- கைப்பணிப்பொருட்களிற்கு ஏற்றுக் கொள்ளத்தக்க தர நியமத்தையும் பேண முடியாமல் உள்ளது. எனவே புதியமுறையை அமுல்படுத்த ஆலேசிக்கின்றது
- வெளிப்புற சக்திகளின் தலையீடு காரணமாக மனித வளத்தின் உச்சப்பயன்பாட்டைப் பெறுதல் இயலாததாக உள்ளது. சபைக்குரிய நிதி நிலை வரம்பு காரணமாக சில செயற்பாடுகள் எல்லைப்படுத்தப்படுவதால் சில பதவிநிலை உத்தியோகத்தர்களின் சேவை குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்படுகின்றது.
- ஓய்விற்குரிய வயதை அடைந்த உத்தியோகத்தர்களின் சேவை நீடிப்பிற்கான அனுமதி விதி விலக்கான தருணங்களில் மட்டும் வழங்கப்பட்டு, மீள வடிவமைக்கும் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

ஈ. பணிப்பாளரின் அறிக்கை

பொதுவான.

பனையுடன் தொடர்பான உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதோடு சமூக மேம்பாட்டையும் மேற்கொள்ளும் ஒரே அரச நிறுவனம் இதுவாகும்.

பிரதான காரியாலயம், யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது. பிராந்தியக் காரியாலயங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இயங்குகின்றன. கொழும்பில் இயங்கும் நகரக் காரியாலயம், பிராந்தியக் காரியாலயங்கள், அமைச்சு, திறைசேரி மற்றும் ஏனைய முக்கிய நிறுவனங்கள் என்பனவற்றை இணைக்கும் காரியாலயமாக செயற்படுகின்றது.

எதிர்காலத் திட்டங்கள்.

சபையினால் செயற்படுத்தப்பட்ட தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை தொழிற்பயிற்சிக்கு உதவும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அரச நிறுவனங்களின் உதவியோடு முன்னெடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படஉள்ளன.

- 03 வருடமுதலீட்டுத்திட்டம் 2012-2015 களிற்கிடையில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- யாழ்ப்பாணத்தில் சாற்று உற்பத்தி நிலையத்தை ஆரம்பித்தல்
- பனங்களி பிரித்தல் தொழிற்சாலையை யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஆரம்பித்தல்
- யாழ்ப்பாணம் கிளிநொச்சி மன்னார், வவுனியா ஆகிய பண்ணைகளை புனருத்தாரணம் செய்தல்.
- கொள்வனவாளர் ,விற்பனையாளர் இணைப்பு கட்டமைப்பை சந்தைப்படுத்தலிற் செற்படுத்தல்

பனை அபிவிருத்திச் சபை
குறிப்பிடத்தக்க கணக்கியற் கொள்கைகள்

1.0 கணக்கியல் மரபுகள்

1:1 திணைக்களத்தின் புதுப்பிக்கப்பட்ட பெறுபேறுகளும் நிதி நிலைமையையும் இலங்கை பட்டய நிறுவனத்தினரால் அடித்தளமிடப்பட்ட பொதுவாக ஏற்றுக்கொள்ளத்தக்க கணக்கியற ் கோட்பாடுகள் மற்றும் பிரயோகிக்கக்கூடிய கணக்கியற் தரங்களுக்கமைய தயாரிக்கப்பட்டன. குறிப்பிடத்தக்கவையான காணி, இயந்திர உபகரணங்கள் தவிர்ந்த ஏனைய பாரம்பரியமான கிரய மரபினை அடிப்படையாகக் கொண்டே நிதியியற் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. கணக்குகளைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்கு செம்மையாக்கல் செய்யப்படுவதில்லை.

சபையினால் கணக்கியற் கொள்கைகள் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளதோடு, அவை முந்தைய ஆண்டு பாவனையின் தொடர்ச்சியாகவுள்ளது. தேவைப்படுமிடத்து குறிப்பிடத்தக்க கணக்கியற் கொள்கைகளுக்கு பின்வரும் குறிப்புக்களில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

1:2 கூட்டிணைப்புக் கொள்கைகள்

பொதுவான நிதியாண்டான ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரை சபையின் கூட்டிணைந்த கணக்கியற் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2:0 சொத்துக்களும் அவற்றின் பெறுமதியின் அடிப்படையும்

2:1 காணி, இயந்திரம் மற்றும் உபகரணம்

2:1.1 சொத்துக்கள்

இயந்திரம் மற்றும் உபகரணம் போன்றவை கிரய அல்லது உத்தேச பெறுமதியில் காட்டிய பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளன. சுயமாக சொத்துகள் நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியில் பொருட்களின் கிரயம், நேரடிக் கூலி உற்பத்தியின் செலவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.
அத்துடன் பன்னை வேலைப்பயிற்சி ஆராய்ச்சி பெறுமதி பனை நடுகைப்பெறுமதிகள் என்பன மூலதனமாக்கபட்டுள்ளது.

2:1.2 மீள / அடுத்துவரும் செலவினங்கள்

இயந்திர உபகரணம் போன்றவற்றின் உதிரிப்பாகத்தை மாற்ற ஏற்படும் உதிரிப்பாக செலவினம் தனியாக மூலதனமாக்கி கணக்கில் காட்டப்பட்டு எழுதி நீக்கப்பட்டது. ஏனைய மீள் வரும் செலவினங்கள் நிலம், இயந்திர உபகரணம் போன்றவற்றின் எதிர்கால பொருளாதார நன்மையை இணைந்து அதிகரிக்கும் பட்சத்தில் மூலதனமயமாக்கப்படும் எல்லா மற்றைய செலவினங்களும் செலவாகக் கணிக்கப்பட்டு வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படும்.

2:1:3 பெறுமானத்தேய்வு

வருமானக்கூற்றில் நிலம் மற்றும் பொருத்துகளுக்கும் உபகரணங்களுக்கும் நிர்ணயிக்கப்பட்ட அவற்றின் கால அளவிற்கேற்ப நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு கணிக்கப்பட்டது. பொதுவாக சொத்துக்கள் கீழ் கண்ட கால எல்லைக்குள் எழுதி நீக்கப்படும்.

கட்டடம்	10 ஆண்டுகள்
இயந்திர உபகரணங்கள்	05 ஆண்டுகள்.
மோட்டார் வாகனங்கள்	05 ஆண்டுகள்.
தளபாடங்களும் இணைப்புக்களும்	05 ஆண்டுகள்.
கணணி மற்றும் ஏனைய பொருத்துக்கள்	05 ஆண்டுகள்.
மின்சார இணைப்புகள்	05 ஆண்டுகள்
அலுவலக மற்றும் பரிசோதனை உபகரணங்கள்	05 ஆண்டுகள்.
நானாவித சொத்துக்கள்	04 ஆண்டுகள்.

கொள்வனவு செய்யப்பட்ட சொத்துகள் மற்றும் உபகரணங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் பெறுமானத்தேய்வு கணிக்கப்பட்டுள்ளது.

2:1:4 கட்புலனில்லா செத்துக்களின் தேய்வு

மேற்படி சொத்துக்கள் கீழ் கண்ட கால எல்லைக்குள் எழுதி நீக்கப்படும்.
பயிற்சிகளின் பெறுமதி 40 ஆண்டுகள்.

2:2 இருப்பெடுப்பு (விற்பனைப் பொருட்கள்)

இருப்புக்கள் சந்தைவிலை அல்லது தேறிய கொள்விலையில் இதில் எது குறைவோ அந்தப் பெறுமதியிலே காட்டப்பட்டுள்ளன. தேறிய பெறக்கூடிய பெறுமதியானது சாதாரண வியாபாரத்தின் போது நிர்ணயிக்கப்படும் விற்பனை விலையில் நிர்ணயிக்கப்பட்ட முடிவுற்ற கிரயம் மற்றும் விற்பனைச் செலவுகள் கழிக்கப்பட்டதாகும்.

இருப்புக்களின் கிரயமானது முதலில் உள்வருவது முதலில் வெளிச்செல்லும் (FIFO) கோட்பாட்டுக்கமைவானது. உற்பத்தி செய்யப்பட்ட இருப்புகளினதும் நடைமுறை வேலைகளினதும் கிரயத்தில் சாதாரண தொழிற்பாடும் ஆற்றலுக்கமைய கணிசமான செலவின் பங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

2:3 காசும் காசிற் சமமானவையும்

கையிருப்பிலுள்ள காசும் குறுகிய கால வைப்புக்களும் காசும் காசிற்கு சமமானவையில் உள்ளடங்கும்.

3. பொறுப்புக்களும், ஒதுக்கங்களும்.

ஓய்வுகால உபகார கடப்பாடுகள்.

3:1,1 நிர்ணயித்த பங்களிப்புத் திட்டங்கள்.

இலாப நட்டக் கணக்கில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள், ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதி என்பன உட்பட செலவினமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. முறையே ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பவற்றுக்கு சபையானது மொத்த ஊதியத்தின் 12 வீதம் மற்றும் 3 வீதம் என்ற விகிதத்தில் பங்களிப்புச் செய்கிறது.

3:1:2 நிர்ணயிக்கப்பட்ட ஓய்வு கால உபகாரத்திட்டங்கள்.

பணிக்கொடை, நிர்ணயிக்கப்பட்ட ஓய்வுகால உபகாரத்திட்டமாகவுள்ளது. அரச சட்டத்திற்கமைய பணிக்கொடை வழங்குவதற்கு சபை கட்டுப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பினை ஏற்படும் வகையில் ஐந்தொகையில் ஒவ்வொரு நிதியாண்டின் கடைசி மாதத்தின் அரை மாதச் சம்பளத்தை அனைத்து ஊழியர்களுக்கும் ஒதுக்குவதற்கான ஏற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. சேவையின் தொடக்க ஆண்டிலிருந்து சேவை முடிவுறும் ஒவ்வொரு ஆண்டும் இக்கணிப்பிற்கு உட்படும்.

எவ்வாறெனினும் 1983 ஆம் ஆண்டின் பணிக்கொடைச் சட்டம் 12 ஆம் இலக்கப்படி சபையில் தொடர்ச்சியாக 5 வருட சேவையைப் ”ர்த்தி செய்தால் மட்டுமே இக்கொடுப்பனவு உரித்துடையதாகும்

வியாபார மற்றும் கொடுப்பனவுகள்.

வியாபார மற்றும் கொடுப்பனவுகள் அதன் கிரயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

4.0 வருமான கூற்று.

4.1 வருமானம்.

வருமானமும் அதனோடு இணைந்து ஏற்பட்ட செலவுகளும் ஏற்படக்கூடிய செலவுகளும் நம்பத்தக்க வகையில் அளவிட முடியும் எனும் பட்சத்தில் பொருளாதார நன்மைகள் சபைக்கு கிடைக்க அது அமைவாகும் என்பதால் வருமானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட முக்கிய அணுகுமுறை வருமானத்தை அங்கீகரிக்கப் பயன்படுத்தப்பட்டது.

(அ) பொருட்களின் விற்பனை.

கணிசமான அபாயங்களும் பதிவுகளும் பொருளின் சொந்தக்காரரிடமிருந்து கொள்முதல் செய்பவரிடம் சென்றடையும் போது பொருட்களின் விற்பனை வருமானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சேவைகள் முடிவுற்றபின் சேவைகளினால் பெறும் வருமானம் அங்கீகாரம் பெறுகின்றது.

(ஆ) ஏனைய வருமானம்.

சொத்தின் ஏற்புடை பெறுமதியும் அது சார்ந்த விற்பனை செலவுகளும் வெளியகற்றல் பெறுமதியில் கழிக்கப்பட்டு, காணி பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் நடைமுறையற்ற சொத்துக்கள் வெளியகற்றும் போது எற்படும் வருமானத் தன்மை கொண்ட தேறிய இலாபங்களும், நட்டங்களும் கணக்கிலெடுக்கப்பட்டுள்ளன.
ஏனைய வருமானம் உண்மைத் தன்மையுடன் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பிரதான வருவாய் உருவாக்கும் செயற்பாட்டுக்கு ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் ஏற்படுத்தும் தற்செயல் நிகழ்ச்சிச் செயற்பாடுகள் மற்றும் குழுமமான ஒத்த கொடுக்கல் வாங்கல்கள் ஆகியவற்றில் எவை காத்திரமற்றவையோ அவை தேறிய முறையில் சேர்க்கப்பட்டு அறிவிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

4.2 செலவினம்.

வருமானக்கூற்றில் செலவுகள் குறிப்பிட்ட வருமான நிரல்களின் சம்பாத்தியம் மற்றும் அடைந்த கிரயம் ∴ செலவுகளுக்கு இடையிலான நேரடி சம்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
வியாபாரத்தை நடாத்துவதிலும் சொத்துக்கள் பொறுப்புக்கள் ஆகியவற்றை திறன் அடிப்படையில் பராமரிப்பதிலும் அடைந்த எல்லாச் செலவுகளும் குறிப்பிட்ட காலப்பகுதியின் இலாப நட்டத்தை ஈட்டும் வருமானத்தில் கட்டணங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

5.0 காசுப் பாய்ச்சல்

இலங்கை கணக்கியல் நியமனக் கூற்று இல 9 காசுப் பாய்ச்சற் கூற்றுக்கு அமைய மறைமுக முறையைப் பயன்படுத்தி திணைக்களத்தின் காசுப்பாய்ச்சல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

6.0 அரசாங்க நிதியீட்டம்

அரசாங்க நிதியீட்டம் பெறப்பட்ட பின்பே நிதியக் கூற்றில் அங்கீகரிக்கப்படுபவை. ஆனவை ஆரம்பத்தில் ஐந்தொகையில் நடைமுறையற்ற பொறுப்புக்கள் மற்றும் எதிர்பார்த்த வருமானத்தின் கீழ் காட்டப்படுவன.

பனை அபிவிருத்திச் சபை

தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி , யாழ்ப்பாணம்

ஐந்தொகை 31.12.2013 இல்

	குறிப்பு	*2013*	*2012*
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை			
நிலம், கட்டிடம், வாகனங்கள், உபகரணங்கள்		*107,184,368.96*	*123,905,989.14*
ஏனைய சொத்துக்கள்		*137,159,161.48*	*83,419,241.98*
		244,343,530.44	*207,325,231.12*
நடைமுறைச் சொத்துக்கள்		*25,024,624.93*	*16,023,585.22*
மொத்தச் சொத்துக்கள்		*269,368,155.37*	*223,348,816.34*
ஒதுக்கங்களும், பொறுப்புக்களும்			
மூலதனம்		*392,909,804.79*	*339,461,874.78*
கூட்டுக : தேறிய வருமானம்		*(146,282,532.91)*	*(135,753,695.82)*
		246,627,271.88	*203,708,178.96*
கூட்டுக :நடைமுறைப் பொறுப்புக்கள்		*22,740,883.49*	*19,640,637.38*
மொத்தப் பொறுப்புக்கள்		*269,368,155.37*	*223,348,816.34*

பனை அபிவிருத்திச் சபை

தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி , யாழ்ப்பாணம்

31 மார்கழி 2013 ல் முடிவடைந்த ஆண்டிற்டகான வருமாணக் கூற்று

	குறிப்பு	***2013***	***2012***
விற்பனைப் புரள்வு	*A*	*20,892,356.89*	*25,138,349.93*
கழி :			
விற்பனைக் கிரயம்	*B*	*16,084,344.88*	*19,236,528.26*
மொத்த இலாபம்		***4,808,012.01***	***5,901,821.67***
திறைசேரியின் நிதியீட்டம்		*60,000,000.00*	*55,664,000.00*
நானாவித வருமானம்	*10*	*8,566,395.68*	*6,354,736.33*
		68,566,395.68	*62,018,736.33*
மொத்த வருமானம்		*73,374,407.69*	*67,920,558.00*
விநியோகச் செலவுகள்	*C*	*459,872.50*	*169,192.00*
நிர்வாகச் செலவுகள்	*D*	*85,479,914.18*	*77,477,445.85*
ஏனைய தொழிற்படு செலவுகள்	*E*	*13,275.00*	*37,751.94*
		85,953,061.68	*77,684,389.79*
குறிப்பிட்ட காலத்திற்கான தேறிய வருமானம்		*(12,578,653.99)*	*(9,763,831.79)*

பனை அபிவிருத்திச் சபை
நிதி நிலவர மாற்றங்களின் கூற்று
2013.12.31 ஆம் திகதிக்கானது

		2013	2012
சொத்துக்கள்	குறிப்பு		
நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை			
நிலம், இயந்திர உபகரணங்கள்	*1*	*107,184,368.96*	*123,905,989.14*
முதலீடுகள் மற்றும் நிதிச் சொத்துக்கள்	*1F*	*137,159,161.48*	*83,419,241.98*
		244,343,530.44	*207,325,231.12*
நடைமுறைச் சொத்துக்கள்			
பதிவேட்டுப் பதிவுகள், சரக்கிருப்பு	*2 E*	*15,814,956.67*	*9,672,620.83*
வியாபாரம் மற்றும் பெற வேண்டியவை	*2A + 2B*	*4,969,339.72*	*4,215,250.06*
முற்பணங்கள்	*2C + 2D*	*789,489.66*	*900,664.79*
காசும் காசுக்கு நிகரானவையும்		*3,450,838.88*	*1,235,049.54*
		25,024,624.93	*16,023,585.22*
மொத்தச் சொத்துக்கள்		*269,368,155.37*	*223,348,816.34*
தேறிய சொத்துக்கள் வழங்கல்கள்			
திரட்டுக்கள்		*246,627,271.88*	*203,708,178.96*
ஒதுக்கங்கள்		-	-
செலுத்தப்பட வேண்டியவை		*246,627,271.88*	*203,708,178.96*
நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை			
கொடுபட வேண்டியவை		-	
எதிர்கொள் வருமானம்		-	
ஓய்வுகால ஒதுக்கம்		*5,015,242.19*	*3,145,927.09*
		5,015,242.19	*3,145,927.09*
பொறுப்புக்கள்			
நின்ற செலவுகள்		*9,885,915.08*	*10,331,846.03*
குறுகிய காலக் கடன்கள்		*7,839,726.22*	*6,162,864.26*
குறுகிய காலக் கடன்கள்		-	-
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		***17,725,641.30***	***16,494,710.29***
மொத்தப் பொறுப்புக்கள்		*22,740,883.49*	*19,640,637.38*
மொத்த தேறிய சொத்துக்கள்		*269,368,155.37*	*223,348,816.34*

பனை அபிவிருத்திச் சபை

31.12.2013 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக் கூற்று

		2013	2012
தொழிற்படு வருமானம்			
மீண்டும் வரும் செலவினத்திற்கான திறைசேரியின் நிதியீட்டம்		60,000,000.00	55,664,000.00
ஏனைய வருமானம்	A	20,892,356.89	25,138,349.93
விற்பனைப் புரள்வு		8,566,395.68	6,354,736.33
நானாவித வருமானம்		29,458,752.57	31,493,086.26
		89,458,752.57	87,157,086.26
ஆள் அணிச்செலவுகள்			
வேதனம்		47,239,027.00	42,397,225.06
ஊழியர் சேமலாப நிதி		5,458,893.36	5,017,157.40
ஊழியர் நம்பிக்கை நிதி		1,376,774.72	1,255,317.51
ஏனைய செலவினம்			
சபை அங்கத்தவர்கள் செலவினம்		300,196.41	898,162.00
மேலதிக நேரக் கொடுப்பனவு		825,250.07	826,546.81
ஓய்வு காலக் கொடுப்பனவு		2,677,996.73	2,474,429.17
போக்குவரத்துச் செலவுகள்		1,148,218.75	1,415,895.29
கொள்வனவு செலவுகள்		18,211,585.74	21,593,200.71
பராமரிப்பு		2,757,713.69	2,625,361.49
ஒப்பந்தச் செலவுகள்		8,428,951.55	9,606,442.67
பெறுமானத் தேய்வு		11,661,237.20	8,624,347.99
சொத்தாக்கல் ஒதுக்கம்		1,497,413.84	-
ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்			
ஏனைய தொழிற்படு செலவினங்கள்		454,147.50	186,831.94
மொத்தத் தொழிற்படு செலவினங்கள்		102,037,406.56	96,920,918.05
வருமானம்		(12,578,653.99)	(9,763,831.79)

பனை அபிவிருத்திச் சபை
வழங்கல் மாற்றங்களின் கூற்று

	2013	2012
மூலதனம் – 01 ஜனவரி	339,461,874.78	212,016,197.53
மூலதனச் செலவினங்களுக்காக அரசினால் (பகிர்ந்தளி		
க்கப்பட்டது)	32,000,000.00	24,048,000.00
என் ஜீ ஒ	3,506,310.50	65,923,783.18
ஏனைய வழிகளிலான மூலத	17,941,619.51	37,473,894.07
	392,909,804.79	339,461,874.78
கீழ் கொண்டு வந்த நட்டம்	135,753,695.82	125,989,864.03
முந்திய காலத்திருத்தம்	(2,049,816.90)	-
நட்டம் குறிப்பிட்ட காலத்திற்	12,578,653.99	9,763,831.79
	146,282,532.91	135,753,695.82
	246,627,271.88	203,708,178.96

பனை அபிவிருத்திச் சபை

31 மார்கழி 2013 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதி

நிலவர மாற்றங்களின் கூற்று

தொழிற்படு நடவடிக்கைகளின் காசுப் பாய்ச்சல்		
மேலதிகம் /குறைபாடு - சாதாரண	*(12,578,653.99)*	*(9,763,831.79)*
நடவடிக்கைகள்		
காசு அற்ற செயற்பாடுகள்		
பெறுமானத் தேய்வு	*36,241,128.70*	*26,748,413.86*
சொத்தாக்கல் ஒதுக்கம்	*1,497,413.84*	*-*
கடன்பட்டோர் கூடுதல் / குறைதல்	*(642,914.53)*	*386,968.66*
கடன் கொடுத்தோர் கூடுதல் / குறைதல்	*3,100,246.11*	*12,327,243.74*
சரக்கிருப்பு கூடுதல் /குறைதல்	*(6,142,335.84)*	*(4,251,368.71)*
சென்ற ஆண்டிற்கான செம்மையாக்கல்	*-*	*-*
	34,053,538.28	*35,211,257.55*
காசு அற்ற செயற்பாடுகளின் தேறல்	*21,474,884.29*	*25,447,425.77*
கூட்டு நிதியின் பிரயோகம்	*(17,469,691.62)*	*(107,937,519.76)*
நிலையான சொத்துக்கள் கொள்முதல்	*(55,237,333.34)*	*(45,452,022.20)*
ஏனைய சொத்துக்கள்	*(72,707,024.96)*	*(153,389,541.96)*
நிகரக் காசுப் பாய்ச்சல் முதலீட்டு நடவடிக்(	*(51,232,140.67)*	*(127,942,116.19)*
நிதி - ஏனைய வழி முறைகள்		
திறைசேரி நிதியீட்டம்	*32,000,000.00*	*24,048,000.00*
அமைச்சின் நிதியீட்டம்	*17,941,619.51*	*37,473,894.07*
என் ஜீ ஒ	*3,506,310.50*	*65,923,783.18*
	53,447,930.01	*127,445,677.25*
மொத்த நிதி உருவாக்கம்	*2,215,789.34*	*(496,438.94)*
வருடத்தின் ஆரம்ப மீதி	*1,235,049.54*	*1,731,488.48*
காலப்பகுதியில் கூடியது	2,215,789.34	(496,438.94)
வருடத்தின் இறுதி மீதி	*3,450,838.88*	*1,235,049.54*

கணக்குகளின் குறிப்புகள்		2013	2012
புரள்வு ஃவிற்பனை	Note A		
உற்பத்திக் கணக்குகள்	5	61,000.00	31,195.00
சந்தைப்படுத்தற் கணக்குகள்	6	18,461,003.26	21,108,051.05
களஞ்சியம் ஃபண்டகசாலைக் கணக்குகள்	7	2,178,038.63	3,886,598.88
பனந்தோட்டக் கணக்குககள்	8	192,315.00	112,505.00
		20,892,356.89	25,138,349.93
விற்பனைக் கிரயம்	Note B		
உற்பத்திக் கணக்குகள்	5	48,000.00	7,393.38
சந்தைப்படுத்தற் கணக்குகள்	6	14,126,116.38	16,336,506.72
களஞ்சியம் ஃபண்டகசாலைக் கணக்குகள்	7	1,850,855.50	2,880,644.41
பனந்தோட்டக் கணக்குககள்	8	51,373.00	11,983.75
தiணைககள கணககுகள	9	8,000.00	-
		16,084,344.88	19,236,528.26
விநியோக செலவு / செலவினம்	Note C		
சந்தைப்படுத்தற் கணக்குகள்	6	128,250.00	-
களஞ்சிய ஃ பண்டகசாலைக் கணக்குகள்	7	129,398.00	92,629.00
பிராந்திய நிர்வாகக் கணக்கு	14	202,224.50	76,563.00
		459,872.50	169,192.00
நிர்வாக செலவுகள்	Note D		
உற்பத்திக் கணக்குகள்	5	14,926,466.25	10,255,298.05
சந்தைப்படுத்தற் கணக்குகள்	6	10,428,936.07	9,948,837.22
களஞ்சிய ஃ பண்டகசாலைக் கணக்குகள்	7	4,823,314.21	5,564,325.79
பனந்தோட்டக் கணக்குககள்	8	4,070,203.21	4,261,887.95
திணைக்கள கணக்கு	9	2,027,323.14	2,415,299.00
பிராந்திய நிர்வாகக் கணக்கு	12	47,706,257.46	45,031,797.83
		83,982,500.34	77,477,446.85
ஏனைய தொழிற்படு செலவு	Note E		
பிராந்திய நிர்வாகக் கணக்கு	11	13,275.00	37,751.94
		13,275.00	37,751.94

குறிப்பு 1

நிலையான சொத்துக்கள்	NOTE	2013	2012
நிலம்	1 A	3,496,249.40	1,766,564.92
கட்டடங்கள்	1 B	37,107,381.05	33,488,119.86
வாகனங்கள்	1 C	9,240,885.65	13,498,312.65
ஏனையவை	1 D	51,424,793.85	68,922,334.02
தனியார் கட்டடத்லமைக்கப்பட்ட பொருத்துக்கள்	1 E	5,915,059.01	6,230,657.69
		107,184,368.96	123,905,989.14

குறிப்பு 1 f

பனை நடுகை	2013	2012
கீழ் கொண்டுவரப்பட்டது	20,395,446.99	18,855,377.39
பனை நடுகை 2012 /2013	1,792,906.04	1,540,069.60
	22,188,353.03	20,395,446.99
ஒதுக்கம்	-	
	22,188,353.03	

பயிற்ச்சித் திட்டங்கள்	2013	2012
கீழ் கொண்டுவரப்பட்டது	38,822,910.68	19,111,842.39
பயிற்ச்சிகள் 2012 /2013	21,073,642.75	19,711,068.29
	59,896,553.43	38,822,910.68
ஒதுக்கம்	1,497,413.84	
	58,399,139.59	

ஆரய்ச்சி அபிவிருத்தி	2013	2012
கீழ் கொண்டுவரப்பட்டது	24,200,884.31	-
ஆராய்ச்சிகள் 2012 /2013	32,370,784.55	24,200,884.31
	56,571,668.86	24,200,884.31
ஒதுக்கம்	-	
	56,571,668.86	
மொத்த ஏனைய சொத்துக்கள்	137,159,161.48	83,419,241.98

குறிப்பு 2

நடைமுறைக் கணக்குகள்	NOTE	2013	2012
கடன்பட்டோர்	2 A	361,196.54	990,039.93
வைப்புகள்	2 B	4,608,143.18	3,225,210.13
முற்பணமும் கடன்களும்	2 C	53,424.16	53,891.25
ஊழியர் முற்பணமும் கடன்களும்	2 D	736,065.50	846,773.54
சரக்கிருப்பு	2 E	15,814,956.67	9,672,620.83
இலங்கை வங்கி - யாழ்ப்பாணம்		408,131.17	426,532.78
இலங்கை வங்கி - மிலாகிரிய		96,590.64	286,133.07
இலங்கை வங்கி - சேமிப்பு - கொழும்பு		146,054.48	17,819.90
இலங்கை வங்கி - சேமிப்பு- யாழ்ப்பாணம்		1,214,414.89	37,302.10
இலங்கை வங்கி - சேமிப்பு - மட்டக்களப்பு		708,528.85	131,673.54
இலங்கை வங்கி - சேமிப்பு - கல்முனை		43,340.95	713.20
இலங்கை வங்கி - சேமிப்பு - கிளிநொச்சி		10,585.48	87,163.99
இலங்கை வங்கி - சேமிப்பு -திருகோணமலை		149,391.88	50,989.78
இலங்கை வங்கி - சேமிப்பு - வவுனியா		302,470.10	75,753.09
இலங்கை வங்கி - சேமிப்பு - மன்னார்		264,316.28	79,554.02
இலங்கை வங்கி - சேமிப்பு - முல்லைத்தீவு		12,167.21	3,358.09
இலங்கை வங்கி - சேமிப்பு - கல்பிட்டி		94,846.95	38,055.98
		25,024,624.93	16,023,585.22

NOTE 1

அபிவிருத்திச் சபை

நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு (நேர்கோட்டு முறையில்)

	விபரம்	பெறுமானத் தேய்வு வீதம்	கிரயம் 01.01.2013	கொள்வனவு	பெறுமதி மாற்றம்	மொத்தம்	பெறுமானத் தேய்வு 01.01.2013	பெறுமானத் தேய்வு	பெறுமானத் தேய்வு	2013 குறைத் தொழுதப் பட்டபெறுமதி	2013 குறைத் தொழுதப் பட்டபெறுமதி
	எ. நிலம்										
1	ஊர்காவற்துறை		5,570.00	-	-	5,570.00				5,570.00	5,570.00
2	மாமுனை		18,290.95			18,290.95			-	18,290.95	18,290.95
3	வீரவில பண்ணை		13,622.59			13,622.59			-	13,622.59	13,622.59
4	கைதடி		415,659.00	-		415,659.00			-	415,659.00	415,659.00
5	கிளிநொச்சி		12,797.00		-	12,797.00			-	12,797.00	12,797.00
6	வவுனியா		48,913.86	-		48,913.86			-	48,913.86	48,913.86
7	மட்டக்களப்புப் பிராந்திய அலுவலகம்		7,935.00	-		7,935.00				7,935.00	7,935.00
8	படப்படி		341,000.00	-		341,000.00				341,000.00	341,000.00
9	கல்பிட்டி		507,461.00	-		507,461.00			-	507,461.00	507,461.00
10	திக்கம்		31,450.00		968,550.00	1,000,000.00			-	1,000,000.00	31,450.00
11	தறவன் கோட்டை மன்னார்		125,000.00	-		125,000.00			-	125,000.00	125,000.00
12	முல்லைத் தீவு		-	-	1,000,000.00	1,000,000.00			-	1,000,000.00	-
			-	-		-			-	-	238,865.52
	பி. கட்டடங்கள்		1,527,699.40	-	1,968,550.00	3,496,249.40	-	-	-	3,496,249.40	1,766,564.92
	யாழ்ப்பாணம்										
1	பண்ணை - நெடுந்தீவு	10%	50,000.00	-		50,000.00	50,000.00		50,000.00	-	-
2	பயிற்சி நிலையம் - நெடுந்தீவு	10%	1,131,225.00	-		1,131,225.00	339,366.00	113,122.00	452,488.00	678,737.00	791,859.00
3	பண்ணை - மண்முனை	10%	2,701,987.55	-		2,701,987.55	560,355.00	270,197.00	830,552.00	1,871,435.55	2,141,632.55
4	தொழிற்சாலை வளாகம் - காரைநகர்	10%	3,367,515.00	1,509,894.40		4,877,409.40	1,951,376.10	-	1,951,376.10	2,926,033.30	1,416,138.90
5	தொழிற்சாலை வளாகம் - திக்கம்	10%	80,159.93			80,159.93	80,159.93		80,159.93	-	-
6	ப.ஆ.நி - கைதடி	10%	23,814,314.55	6,050,741.92		29,865,056.47	5,155,979.20	2,986,505.00	8,142,484.20	21,722,572.27	18,658,335.35
7	பண்ணை - குடத்தனை	10%	860,751.00	97,416.00		958,167.00	306,322.00	95,816.00	402,138.00	556,029.00	554,429.00
			32,005,953.03	7,658,052.32	-	39,664,005.35	8,443,558.23	3,465,640.00	11,909,198.23	27,754,807.12	23,562,394.80
	மன்னார்										
1	பண்ணை - நறுவிலிக்குளம்	10%	118,176.00	-		118,176.00	118,176.00		118,176.00	-	-
2	தும்பு நிலையம் - கட்டுக்காரன் குடியிருப்பு	10%	1,148,720.25	-		1,148,720.25	944,516.50	114,872.00	1,059,388.50	89,331.75	204,203.75
3	தும்பு நிலையம் - ஓமலாக்காடு	10%	588,254.40	-		588,254.40	314,333.70	58,825.00	373,158.70	215,095.70	273,920.70
4	தும்பு நிலையம் - சல்வாரி	10%	423,907.45	258,825.00		682,732.45	254,340.75	68,272.00	322,612.75	360,119.70	169,566.70
5	தறவன் கோட்டை மன்னார்	10%	2,165,302.75	-		2,165,302.75	1,082,650.00	216,530.00	1,299,180.00	866,122.75	1,082,652.75
6	படப்படி	10%	36,000.00	-		36,000.00	7,200.00	3,600.00	10,800.00	25,200.00	28,800.00
7				-	-	-	-	-	-	-	66,636.00
			4,480,360.85	258,825.00	-	4,739,185.85	2,721,216.95	462,099.00	3,183,315.95	1,555,869.90	1,825,779.90
	வவுனியா										
1	மாதிரிப் பண்ணை புளியங்குளம்	10%	2,654,622.66	99,685.00		2,754,307.66	351,205.90	180,818.00	532,023.90	2,222,283.76	2,303,416.76
			2,654,622.66	99,685.00	-	2,754,307.66	351,205.90	180,818.00	532,023.90	2,222,283.76	2,303,416.76
	மட்டக்களப்பு										
